**Press Release No: 6** **Date: 06.06.2025**

**V.O. Chidambaranar Port declares itself as 'Plastic Free' on World Environment Day 2025**

V.O. Chidambaranar Port Authority celebrated 'World Environment Day', on 5th June 2025, on the theme 'Beat Plastic Pollution', reaffirming its commitment to environmental stewardship and sustainable practices.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, and the chief guest of the event Shri B. Kasiviswanathan, IRSME, Chairperson, Cochin Port Authority jointly unveiled the plaque declaring V.O. Chidambaranar Port Authority as a "Plastic Free Zone", in the presence of Shri Rajesh Soundararajan, IAS, Deputy Chairperson and Shri P.Kavin Maharaj, IOFS, Chief Vigilance Officer and other Senior officers of the Port, marking a major milestone in the Port's journey towards environmental responsibility. This significant sustainability milestone reinforces our commitment to Sustainable consumption & production, protecting oceans and marine ecosystems and Preserving life on land.

The Chief Guest, Shri B. Kasiviswanathan, IRSME, Chairperson, Cochin Port Authority, in his address emphasized the urgent need to adopt sustainability initiatives to restore and protect the environment. He commended the Port for achieving the distinction of becoming India's first plastic-free Port. He also distributed the prizes to the winners of various competitions organised by the port, as apart of the 'World Environment Week'.

Shri Susanta Kumar Purohit, IRSEE, Chairperson, in his speech highlighted the various green initiatives carried out by the Port reflecting the Port's strong commitment to protecting the environment and building a cleaner, greener future. Shri Rajesh Soundararajan, IAS, Deputy Chairperson, remarked that the activities conducted during the World Environment Week have laid a strong foundation for the accelerated implementation of all green initiative projects identified at VOC Port.

VOC Port organized a series of impactful initiatives throughout the week-long observance from 1st to 5th June 2025. 'Go Green Walkathon', sapling distribution, Green Pledge, "Best Out of Waste" competition, Slogan Writing contest, Rangoli Competition and the "Green IQ" Awareness Quiz, photography & reel making competition were organised for the employees of the Port. To sensitise awareness on Environment protection, a Street Play on the theme "Plastic Free Zone" was conducted at prominent locations of the port.

Reinforcing its role as a dedicated steward of environmental sustainability, the Port is upgrading its administrative office to meet green certification standards. A 1 MW Solar Power Project is under execution, and a 2 MW Battery Storage System is under active consideration. The tender process has commenced for a 6 MW Wind Power Project and Green Methanol Bunkering facilities. Feasibility studies are underway for innovative solutions like Wind Tree, Solar Tree, and Offshore Wind Energy. The Shore-to-Ship Power Supply project for coastal berths is making steady progress. An MoU with NTPC has been planned for the development of an additional 1 MW of Green Hydrogen. Collaborative green corridor studies are ongoing with the European Union, and the Ports of Singapore and Rotterdam, in coordination with Deendayal Port Authority. Discussions are also in progress with stakeholders on establishing a biofuel corridor and advancing green hydrogen initiatives.

Shri Srinivasa Rao Chilli, Chief Engineer, welcomed the gathering and gave an insight on the environment protection initiatives carried out by the Port. Smt. Sheba, Executive Engineer, Civil Engineering Department, proposed the vote of thanks, expressing gratitude to all participants and organizers for making the World Environment Week a grand success.

The above details were furnished in a Press -Release by the V.O. Chidambaranar Port Authority today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports,Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin -628 004
Tamilnadu

SAGARMALA
Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS compliant Port

Fax : 91-461-2352232
Email id : pro@vocport.gov.in
Website : www.vocport.gov.in

பத்திரிக்கை செய்தி :06 நாள்:06.06.2025

**வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று பிளாஸ்டிக் இல்லாத துறைமுகம் என்று அறிவித்துள்ளது**

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை செயல்முறைகளுக்கான துறைமுகத்தின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் ஜீன் 5, 2025 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை 'பிளாஸ்டிக் மாசுபாட்டை ஒழிப்போம்' என்னும் கருப்பொருளில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் மற்றும் திரு.பி. காசி விஸ்வநாதன், இ.ர.ப.இ.பொ, கொச்சின் துறைமுக ஆணையத் தலைவர் இருவரும் இணைந்து வ.உ.சிதம்பரனார் ஆணையத்தை 'நெகிழி (பிளாஸ்டிக்) இல்லாத மண்டலம்' (Plastic Free Zone) என்ற பெயர் பலகையை திரு.ராஜேஷ் சௌந்தரராஜன், இ.ஆ.ப., துணைத் தலைவர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம், திரு.பி.கவின் மகாராஜ், IOFS, தலைமை கண்காணிப்பு அதிகாரி, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் மற்றும் துறைமுகத்தின் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் திறந்து வைத்தார்கள்.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினரான திரு.பி. காசி விஸ்வநாதன், இ.ர.ப.இ.பொ, கொச்சி துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு அவர் தனது உரையில் சுற்றுச்சூழலை மீட்டெடுத்து அதனைப் பாதுகாக்க 'நிலைத்தன்மைக்கான முயற்சிகளை எடுக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார். இந்தியாவின் முதல் பிளாஸ்டிக் இல்லாத துறைமுகமாக வ.உ.சிதம்பரனார் துறைமுகம் மதிப்பீடு பெற்றதற்காக துறைமுகத்தைப் பாராட்டினார். மேலும் அவர் உலக சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு துறைமுகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

திரு. சுசாந்த குமார் புரோஹித், இ.ர.ப.மி.பொ., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் தனது உரையில் சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும், சுத்தமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதிலும் துறைமுகத்தின் உறுதியான அர்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பசுமை முயற்சிகளை எடுத்துரைத்தார். திரு. ராஜேஷ் சௌந்தர ராஜன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக துணைத் தலைவர் கூறுகையில் உலக சுற்றுசூழல் வாரத்தில் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளும் துறைமுகத்தின் பசுமை முயற்சி திட்டங்களை விரைவாக செயல்படுத்துவதற்கு வலுவான அடித்தளமாக அமைந்துள்ளது என்று கூறிப்பிட்டார். வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தினை 'நெகிழி (பிளாஸ்டிக்) இல்லாத பகுதி என அறிவித்ததன் மூலம் நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி, கடல் மற்றும் கடற்சார் சுற்றுசூழலை பாதுகாத்தல் மற்றும் தரைவாழ் உயிரனங்களின் பாதுகாப்பு ஆகிய மூன்று பிரிவுகளின் மாசுபாட்டினை தடுப்பதற்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

ஜீன் மாதம் 1 முதல் 5 வரை நடைபெற்ற சுற்றுசூழல் வார கொண்டாட்டத்தில் துறைமுகம் சுற்றுப்புற சூழலில் பல தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது. துறைமுக ஊழியர்களுக்கு பசுமை நடைபயணம், மரக்கன்றுகள் வழங்குதல், பசுமை உறுதிமொழி எடுத்தல், கழிவிலிருந்து சுத்தத்தை நோக்கி பயணித்தல் என்ற தலைப்பில் போட்டி, வாசக எழுத்துப் போட்டி, கோலப் போட்டி மற்றும் பசுமை விழிப்புணர்வு வினாடிவினா போட்டி, புகைப்படம் மற்றும் குறும்படம் திரையிடல் போட்டிகளை ஏற்பாடு செய்திருந்தது. மேலும் சுற்றுசூழல் பாதுகாப்பை குறித்த விழிப்புணர்வை ஏற்படும் வகையில் 'நெகிழி (பிளாஸ்டிக்) இல்லாத மண்டலம்' எனும் கருப்பொருளில் துறைமுகத்தின் முக்கியமான பகுதிகளில் தெரு நாடகம் நடைபெற்றது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் சுற்றுசூழல் நிலைத்தன்மைக்கான தனது அர்பணிப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் தனது நிர்வாக அலுவலகத்தை பசுமை சான்றிதழ் தரநிலைகளை பூர்த்தி செய்யும் வகையில் மேம்படுத்தி வருகிறது. 1 மெகாவாட் சூரியமின்சக்தி திட்டம் தற்போது செயல்படுத்தபட்டு வருகிறது, மேலும் 2 மெகாவாட் மின்கல சேமிப்பு அமைப்பை செயல்படுத்தும் திட்டம் தீவிர பரிசிலனையில் உள்ளது. 6 மெகாவாட் காற்றாலை மின் திட்டம் மற்றும் பசுமை மெத்தனால் சேமிப்பு வசதிக்கான ஒப்பந்ததிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் காற்றாலை போன்ற மரவடிவிளான காற்றாலை மரம் (wind tree), சூரிய மின்னாலை வடிவிளான சூரிய மரம் (Solar tree) மற்றும் தரைதள

காற்றாலை போன்ற புதுமையான முயற்சிகளுக்கான சாத்திய கூறு ஆய்வுகள் நடைபெற்ற வருகின்றன. உள்நாட்டு சரக்குகளை கையாளும் தளத்தில் தரைதளத்திலிருந்து கப்பல்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தில் நிலையான முன்னேற்றம் காணப்படுகிறது. கூடுதலாக 1 மெகாவாட் பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்வதற்காக தேசிய அனல்மின் நிலையத்துடன் (National Thermal Power Corporation Limited) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதற்கான திட்டம் நடைமுறையில் உள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சிங்கப்பூர், ரோட்டர்டாம் துறைமுகங்களுடன் இணைந்து பசுமை வழித்தடம் தொடர்பான கூட்டாய்வுகள் தீனதயால் துறைமுக ஆணையத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றன. உயிரி எரிப்பொருள் வழித்தடத்தை நிறுவுதல் (Bio-fuel corridor) மற்றும் பசுமை ஹைட்ரஜன் தொடர்பான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து துறைமுக உபயோகிப்பாளர்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

திரு.சீனிவாச ராவ் சில்லி, தலைமைப் பொறியாளர், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் அவர்கள் அனைவரையும் வரவேற்று துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் குறித்த மேலோட்டமான விளக்கத்தை கூறினார். திருமதி. டீ. ஷேபா, நிர்வாகப் பொறியாளர், சிவில் துறை அவர்கள் உலக சுற்றுச்சூழல் வார விழாவை வெற்றிகரமாக நடத்த துணையாக இருந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கும் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி